**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 827/2022**

**Prosecution Witnesses :1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **போதுராமன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **முத்தையா** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)

**(12.03.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது பறம்புபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 17.03.2017ம் தேதி காலை 9.20 மணிக்கு எனது மகன் வயக்காட்டிற்கு சென்றுவிட்டு மேற்கிலிருந்து கிழக்காக பறம்புபட்டிக்கும் சம்பக்குளத்திற்கும் இடையே உள்ள மேட்டில் இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்த போது பாலசக்தி என்ற பேருந்தானது எனது மகன் மீது பின்னாடி வந்து மோதியது. நான் தகவல் கிடைத்து சம்பவயிடத்திற்கு வந்த போது வண்டி நின்றது. சம்பவயிடத்திற்கு சென்று நானும் மற்றவர்களும் சேர்ந்து எனது மகனை ஆம்புலன்சில் கூட்டி சென்ற போது போகும் வழியில் எனது மகன் இறந்துவிட்டான். பின்பு மருத்துவமனைக்கு கூட்டி சென்றோம். அவர் இறந்துவிட்டதாக சொன்னார். பின்பு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை